<u>நினைவூட்டல்-02</u>

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3898/ஆ2/2024 நாள்: 04.12.2024

பொருள்: பள்ளிக் கல்வி-வேலூர் மாவட்டம்-கல்வி உதவித்தொகை-2023-2024 ஆம் கல்வியாண்டு-9 மற்றும் 10 ஆம் வகுப்பு அரசு பள்ளிகளில் பயின்ற மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை விடுவித்தல்-வங்கி கணக்கு விவரங்கள் கோருதல்-வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்ய தெரிவித்தல்- சார்பு.

பார்வை:
1. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்:30.10.2024
2. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்:18.11.2024
3. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரின் கடித ந.க.எண்.என்4/16469/2024 நாள்:12.11.2024

---------

வேலூர் மாவட்டம், 2023-2024 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவை சார்ந்த மாணவியர்களுக்கு கீழ்காணும் காரணங்களால் கல்வி உதவித்தொகை விடுவிக்க இயலாமல் உள்ளது.

1.வங்கி கணக்கு துவங்காமல் இருத்தல்.

2.வங்கி கணக்கில் போதிய இருப்பு இல்லாமல் இருத்தல்.

3. வங்கி கணக்கு துவங்கப்படும் ஆதாருடன் இணைக்கப்படாமல் இருத்தல்.

மேற்காண் பொருள் சார்ந்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மாணவியர்களின் பெயர் பட்டியல் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய Google Sheet link-இவ்வலுவலக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. இருப்பினும், ஒரு சில பள்ளிகளை தவிர மற்ற பள்ளித் தலைமையாசிரியர்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய செய்தியாகும். மேற்படி, மறுநினைவூட்டலுக்கு இடமளிக்காமல் விரைந்து செயல்பட்டு இணைப்பில் உள்ள Google Sheet link-இல் கோரப்பட்டுள்ள விவரங்களை பூர்த்தி மற்றும் கல்வி உதவித்தொகை விடுவிக்க இயலாமல் உள்ள மேல்குறிப்பிட்டுள்ள காரணங்களை நிவர்த்தி செய்து அதனை ரீமார்க்ஸ் களத்தில்(Remarks column) பதிவுகள் மேற்கொண்டு, தலைமையாசிரியர் கையொப்பமிட்ட நகலினை 09.12.2024-ஆம் தேதிக்குள் இவ்வலுவலக ஆ2 பிரிவில் ஒப்படைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:
1. பள்ளிகளின் பெயர் பட்டியல்
2. Google Sheet link

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள். (இவ்வலுவலக இணையதளம் மூலமாக).